# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1711/4 - 2011 ජූනි 20 වැනි සඳුදා - 2011.06.20

*1711/4 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 4/96.*

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆவது பிரிவின் கீழ் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

டாக்டர் ராஜித சேனாரத்ன,
கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2011, யூன் 13.

ஒழுங்குவிதி

1. இந்த ஒழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நில்வெள்ள கடற்றொழில் ஒழுங்குவிதி என எடுத்துக் காட்டப்படலாம்.

2. மீன் பிடிப்பதற்கென நில்வெள்ள கடற்றொழிற் துறைமுக இடப்பரப்பிற்குள் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடும் எவரேனும் ஆளினால் பயன்படுத்தப்படவுள்ள மீன்பிடி உபகரணமானது தூண்டிற் கோல் மற்றும் கயிறு மீன்பிடி உபகரணத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

4. இந்த ஒழுங்குவிதியில் -

“நில்வெள்ள கடற்றொழிற் துறைமுக இடப்பரப்பு” என்பது நில்வெள்ள இடப்பரப்பில் நில்வெள்ள முனைக்கும் அல்லது பெரவாகலைக்கும் இடையில் துகஹாவெல்லயிலிருந்து ஹங்வெல்ல வரையில் அமைந்துள்ள ஆள்புல நீர்ப்பரப்பில் ஒன்று தசம் ஐந்து (1.5) கடல் மைல்களுக்குட்பட்ட இடப்பரப்பு எனப்பொருள்படும்.

*7- 143*